# கள்ளக்குறிச்சி நகராட்சி

கள்ளக்குறிச்சி நகராட்சியின் நகர் மன்ற சாதாரணக் கூட்டம் 05.09.2022 ஆம் தேதி திங்கள் கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நகர் மன்ற தலைவர் தலைமையில், நகராட்சி நகர் மன்ற கூட்ட அரங்கில் நடைப்பெற்ற கூட்ட நடவடிக்கைகள்.

## <u>கூட்டநடவடிக்கை பொருள்கள்</u>

**பொருள் எண்.** 01

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டுகளில் உள்ள 27 எண்ணிக்கையிலான சமுதாய கழிவறைகள் உள்ளது. இக்கழிவறைகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கட்டப்பட்டு பயன்படுத்தி வந்த நிலையில் இக்கழிவறைகளில் ஏற்பட்டுள்ள கதவுகள் உடைப்பு, ஜன்னல்கள் பழுது, சுவர் பகுதிகள் சேதம் மற்றும் தண்ணிர் குழாய்கள் பழுதுகள் போன்ற சிறு சிறு பழுதுகள் காரணமாக முழுமையாக பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேலும் இந்நகராட்சி நகர்மன்ற தீர்மானம் எண்.194, நாள்.28.07.2022-ல் மேற்கண்ட சமுதாய கழிவறைகளை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மகளிர் சுய உதவி குழுக்களின் நபர் ஒருவரை தேர்வு செய்து அந்நபரின் வசம் ஒப்படைப்பு செய்து பராமரிப்பு செய்திடவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே மேற்படி சமுதாய கழிவறைகளில் உள்ள பழுதுகளை நீக்கி முழுமையாக பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் அதனை தொடர்ந்து பராமரிப்பு பணிகளைமகளிர் சுய உதவி குழுக்களின் நபர் ஒருவரை தேர்வு செய்து ஒப்படைப்பு செய்திட ஏதுவாக மேற்படி பழுதுநீக்க பணிகள் செய்யப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே, இப்பணிகள் மேற்கொள்ள ஏற்படும் தோரய மதிப்பீடு தொகை ரூ.8,00,000/-(ரூபாய் எட்டு இலட்சம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2288 / 2022 / இ1)

**பொருள் எண். 02**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 01 முதல் 07 வரையில் 114-க்கும் மேற்பட்ட சிறுமின் விசைப்பம்புகள் உள்ளன. இதனை பொதுமக்கள் அன்றாட தேவைக்காக பயன்படுத்தி வருகின்றனர்.இதில் சில ஆழ்துளை கிணறுகளிலிருந்து தண்ணீர் குடிநீர் பகிர்மான குழாய்களுக்கு கொண்டு சென்று விநியோகம் செய்யப்படுகிறது. இந்த அமைப்பில் மோட்டார், குழாய்கள், பேனல் போர்டுகள், கன்டன்சர், பி.வி.சி. மேல் நிலை தொட்டிகள் மற்றும் இதர உபகரணங்கள் உள்ளன. இவற்றில் ஏதேனும் பகுதடைந்தால் இதனை உடனடியாக சரிசெய்யும் பணி மிகவும் அவசியமாகிறது.

நகராட்சி பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவதில் எவ்வித இடையூறும் இன்றி தண்ணீர் வழங்கிட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அவர்களால் அவ்வப்போது அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், இப்பணி நகராட்சியின் முக்கிய பணிகளில் ஒன்றாகவும் உள்ளது.

எனவே, மேற்கண்ட பணிகளில் உதிரி பாகங்களுடன் கூடிய பணிகள் செய்ய வேண்டியுள்ளது. எதிர்வரும் கோடை காலத்தில் ஏற்படும் வறட்சியினை எதிர்கொள்ள இப்பணிகளின் முக்கியத்துவத்தினை கருதி, பொதுமக்களுக்கு தங்கு, தடையின்றி குடிநீர் வழங்குவதற்கு 2022-2023 ஆம் ஆண்டிற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 9,95,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2263 / 2022 / இ1)**

**பொருள் எண். 03**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 15 முதல் 21 வரையில் 105-க்கும் மேற்பட்ட சிறுமின் விசைப்பம்புகள் உள்ளன. இதனை பொதுமக்கள் அன்றாட தேவைக்காக பயன்படுத்தி வருகின்றனர்.இதில் சில ஆழ்துளை கிணறுகளிலிருந்து தண்ணீர் குடிநீர் பகிர்மான குழாய்களுக்கு கொண்டு சென்று விநியோகம் செய்யப்படுகிறது. இந்த அமைப்பில் மோட்டார், குழாய்கள், பேனல் போர்டுகள், கன்டன்சர், பி.வி.சி. மேல் தொட்டிகள் மற்றும் இதர உபகரணங்கள் உள்ளன. இவற்றில் ஏதேனும் பழுதடைந்தால் இதனை உடனடியாக சரிசெய்யும் பணி மிகவும்

அவசியமாகிறது.

நகராட்சி குடிநீர் வழங்குவதில் எந்தவித இடையூறும் இன்றி தண்ணீர் வழங்க மண்டல இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் அவ்வப்போது அறிவுரை வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், இப்பணி நகராட்சியின் முக்கிய பணிகளில் ஒன்றாகவும் உள்ளது.

எனவே, மேற்கண்ட பணிகளில் உதிரி பாகங்களுடன் கூடிய பணிகள் செய்ய வேண்டியுள்ளது. எதிர்வரும் கோடை காலத்தில் ஏற்படும் வறட்சியினை எதிர்கொள்ள இப்பணிகளின் முக்கியத்துவத்தினை கருதி, பொதுமக்களுக்கு தங்கு, தடையின்றி குடிநீர் வழங்குவதற்கு 2022-2023 ஆம் ஆண்டிற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 9,95,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2264 / 2022 / இ1)**

**பொருள் எண். 04**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்குச் சொந்தமான தெருமின் விளக்குகள் பராமரிப்பு வாகனம் எண். TN 15 W 0158-க்கு தற்போது ஆயில் சர்வீஸ், 4-வீல் பிரேக், ஸ்பிரிங் பட்டை, ஹீட்டர் பிளக் மற்றும் பேட்டரி ஆகியவை பழுதடைந்து வாகனத்தினை இயக்குவதற்கு மிகவும் சிரமமாக உள்ளதால், மேற்படி வாகனத்தினை பழுது நீக்கம் செய்யப்பட வேண்டியது. மிகவும் அவசியமாகிறது. எனவே, இந்நகராட்சியில் தெருமின் விளக்கு பராமரிப்பு பணிக்கு பயன்படுத்தப்பட்டு TN 15 W 0158 என்ற எண்ணுள்ள வாகனத்தினை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச செலவீனம் ரூ. 35,000/- (ரூபாய் முப்பத்தி ஐந்தாயிரம் மட்டும்)-க்கு மன்றத்தின் அனுமதிக்கும். பணியின் அவசர அவசியம் கருதி அரசு அங்கீகாரம் பெற்ற வாகன பழுது நீக்க நிறுவனங்களிடம் உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரி பெறப்பட்டதன் விவரம் கீழ் வருமாறு.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1. | கள்ளக்குறிச்சி நகராட்சிக்குச் சொந்தமான தெருமின் | ரூ. 35,000/- | M/s SK Motors. கள்ளக்குறிச்சி | ரூ. 34,550/- மதிப்பீட்டிற்கும் குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | விளக்குகள் பராமரிப்பு வாகனம் எண். TN 15 W 0158- பழுது நீக்கம் பணிகள் செய்தல் | | M/s Ragavendra Motors. Villupuram | ரூ. 39,450/- மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| | | | M/s ஓம் முருகா ஆட்டோ டீசல் லேபர் ஒர்க்ஸ், கள்ளக்குறிச்சி | ரூ. 41,150/- மதிப்பீட்டிற்கும் அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர, அவசியத்தினை கருதி உள்ளூர் அரசு அங்கீகாரம் பெற்ற வாகன பழுது நீக்க நிறுவனங்களிடமிருந்து உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரி பெறப்பட்டதில் மதிப்பீட்டை விட குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள M/s SK Motors.கள்ளக்குறிச்சி என்ற நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி பணிகளை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2104 / 2022 / இ1)

**பொருள் எண். 05**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட துருகம் சாலையில் அமைந்துள்ள உரத்திடலில், தூய்மை இந்தியா திட்டம் 2018-2019ன் கீழ் 26621 க.மீ. அளவுள்ள குப்பைகளை பிரித்து அப்புறப்படுத்துவதற்கு ரூ. 175.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்து, பணிகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் காணொலி காட்சி அறிவுரையில், அனைத்து நகராட்சிகளிலும் திடக்கழிவு மேலாண்மை பணிகளை 100 சதவிகிதம் செயல்படுத்திடவும், நகராட்சிகளின் உரக்கிடங்கில் சேகரமாகியுள்ள குப்பைகளை Bio Mining முறையில் அப்புறப்படுத்தவும், ஏற்கனவே Bio Mining பணிகள் நடைபெற்று வரும் நகராட்சிகளில் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ள அளவினை தவிர்த்து, கூடுதலாக Bio Mining முறையில் பிரித்தெடுக்கப்பட வேண்டிய குப்பைகளை அளவீடுகள் செய்து கருத்துரு தயார் செய்து சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 10, துருகம் சாலையில் அமைந்துள்ள உரத்திடலில் மீதமுள்ள குப்பைகளை Bio Mining முறையில் பிரித்தெடுத்து அப்புறப்படுத்தும் பணிகளை தனியார் கலந்தாலோசகர் நிறுவனம் மூலம் மேற்கொண்டு, அதனடிப்படையில் சென்னை அண்ணா பல்கலைகழகத்தின் மூலம் அறிக்கைகள் பெறுவதற்கும், அதற்காகும் உத்தேச செலவின தொகை ரூ. 3,00,000/ (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர, அவசியத்தினை கருதி முதற்கட்டமாக மீதம் உள்ள குப்பைகளை அளவீடு செய்யும் பணிகளை அண்ணா பல்கலைக்கழகம் ஒப்புதல் அளித்தள்ள தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ளவும் சென்னை அண்ணாமலை பல்கலைக்கழகம் கலந்தாலோசகர் நிறுவனம் மூலம் (Consistency Services) அறிக்கைகள் பெற்று அதனடிப்படையில் திட்டப்பிரேரனை தயார் செய்யவும் நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை 28. அவர்களிடம் நிதி ஒதுக்கீடு பெற்று, அண்ணா பல்கலைக்கழகத்தின் Centre for Environmental Sciences நிறுவனத்தின் உதவி பேராசிரியர்களின் நேரடி மேற்பார்வையின் மூலம் பணிகளை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட பணிக்கான தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2262 / 2022 / இ1)

**பொருள் எண். 06**

தமிழ்நாடு அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் செயல்படும்நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணங்களால் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் அடிப்படை வசதி பணிகள் பாதிக்கப்படதா வண்ணம் அதற்கு அப்பணிகளுக்கு தேவையான பணியாட்களை தளியார் நிறுவனங்கள் / ஒப்பந்த அடிப்படையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள செயல் திறன் வழி முறைகள் குறித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது கீழ் வருமாறு.

1. அரசாணை எண்.111, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.17.08.2022-ல் நகர்புற உள்ளாட்சி பகுதிகளில் தெருமின் விளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதில் ஏற்பட கூடிய இடர்பாடு தவிர்க்கம் பொருட்டு பராமரிப்பு பணிகளை தளியார் நிறுவனங்கள் / ஒப்பந்த அடிப்படையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள செயல் திறன் வழி முறைகள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.
2. அரசாணை எண்.112, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.17.08.2022-ல் நகர்புற உள்ளாட்சி பகுதிகளில் குடிநீர் விநியோகம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதில் ஏற்பட கூடிய இடர்பாடு தவிர்க்கம் பொருட்டு பராமரிப்பு பணிகளை தளியார் நிறுவனங்கள் / ஒப்பந்த அடிப்படையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள செயல் திறன் வழி முறைகள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.
3. அரசாணை எண்.113, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.17.08.2022-ல் நகர்புற உள்ளாட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதில் ஏற்பட கூடிய இடர்பாடு தவிர்க்கம் பொருட்டு பராமரிப்பு பணிகளை தளியார் நிறுவனங்கள் / ஒப்பந்த அடிப்படையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள செயல் திறன் வழி முறைகள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணைகளை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு**:-

1. மன்றம் பதிவு செய்ய அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1005 / 2022 / இ1)

**பொருள்.07**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 19-ல் ஏமப்பேர் கரியப்பா நகர் ஏரிக்கரை பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான கிணற்றிலிருந்து அப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் இக்கிணற்றில் மேல் மூடி இல்லாமல் உள்ளது இதனால் கிணற்றில் உள்ள நீர் மாசுடைந்து வருகிறது. எனவே பொதுமக்களுக்கு சுத்தமான நீர் வழங்குவதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. இதனை தவிர்க்கும் பொருட்டு மேற்படி கிணற்றின் மேல்மூடி அமைத்து இதர பணிகள் மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே, இப்பணிகள் மேற்கொள்ள ஏற்படும் தோரய மதிப்பீடு தொகை ரூ.4,00,000/-(ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2286/ 2022 / இ1)**

**பொருள்.08**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 6-ல் உள்ள வாய்க்கால் மேட்டுத்தெரு சக்தி விநாயகர் கோயில் அருகில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான மேல்நிலை நீர்தேக்க தொட்டி பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இதனால் அப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்வதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே அப்பகுதியில் மேற்படி பழுதடைந்த மேல்நிலை நீர்தேக்க தொட்டியை பழுதுகள் நீக்கி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.6,50,000/-(ரூபாய் ஆறு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2287/ 2022 / இ1)**

**பொருள்.09**

கள்ளக்குறிச்சி நகராட்சி அரசாணை (நிலை) எண். 154, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

நாள். 09.08.2021-ம் ஆண்டு, முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி 15.87 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில், 21 வார்டுகளை உள்ளடக்கியும், 2011-ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 52507 மக்கள் வசித்து வருகிறார்கள். மேலும், தற்போது 75,000க்கு மேல் உள்ளனர் மேலும் வருங்காலங்களில் மக்கள் தொகை அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே, நகரில் வசிக்கும் பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கும் பொருட்டு, இந்நகராட்சியில் பல்வேறு திட்டங்களின் கீழ் வளர்ச்சிப் பணிகள் மற்றும் பொதுசுகாதார பணிகள், தெருவிளக்குகள், குடிநீர் விநியோகம் உள்ளிட்ட பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகளை நேரில் சென்று பார்வையிடுவதற்கும், கண்காணிப்பதற்கும் அலுவலக பயன்பாட்டிற்கு 2 எண்ணிக்கை ஈப்பு வாகனங்கள் கீழ்க்காணும் விவரப்படி வாங்கப்பட்டது.

| வ.எண் | ஈப்பு வாகனத்தின் பதிவு எண் | வாகனம் வாங்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|
| 1. | TN 32 AV 2277 | 2012 |
| 2. | TN 15 Y 6671 | 2014 |

மேலும், அரசாணை (நிலை) எண். 2275, Home (Transport-E) Department, நாள். 10.10.1990ல், டீசல் உபயோக ஈப்பு வாகனம் வாங்கப்பட்டு 10 ஆண்டுகள் முடிந்தும் அல்லது 2,50,000 கிலோ மீட்டருக்கும் மேல் இயக்கப்பட்டும், இதில் எது அதிகமாக உள்ளதோ அதன் அடிப்படையில் வாகனத்தினை கழிவு செய்யவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட ஈப்பு வாகனங்களில் வரிசை எண். 01ல் கண்டுள்ள TN 32 AV 2277 வாகனம் வாங்கப்பட்டு 10 வருடங்களுக்கும் மேல் ஆவதாலும், 3,15,000 கி.மீ.க்கும் மேல் இயங்கப்பட்டுள்ளதாலும், ஈப்பு வாகனத்தினை இயக்குவதில் பலவித சிரமங்கள் ஏற்படுகிறது. மேற்படி, வாகனத்தினை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் கூடுதலாக செலவினங்கள் ஏற்படும் சூழல் இருந்து வருகிறது. மேலும், மேற்படி வாகனத்தினை தொழில்நுட்ப ரீதியாக இனி வருங்காலங்களில் இயக்க இயலாத சூழ்நிலையில், மேற்படி TN 32 AV 2277 ஈப்பு வாகனத்தினை வாகன கழிவு மேற்கொள்ளவும், இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டிற்கு புதியதாக ஒரு ஈப்பு வாகனம் வாங்கப்பட வேண்டியதும் மிகவும் அவசியமாகிறது.

எனவே, இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டிக்கு புதியதாக மஹேந்திரா & மஹேந்திரா கம்பெனியின் Bolero ஈப்பு வாகனம் வாங்குவதற்கும், அதற்காகும் உத்தேச செலவினம்ரூ. 15.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி TN 32 AV 2277 ஈப்பு வாகனத்தினை வாகன கழிவு மேற்கொள்ளவும், புதியதாக ஈப்பு வாகனம் வாங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2262 / 2022 / இ1)**

### பொருள்.10

நகராட்சி நிர்வாக இணை இயக்குநர், (திட்டப்பணிகள்) சென்னை, அவர்களின் ஆய்வுகூட்ட அறிவுறையில் கள்ளக்குறிச்சி நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2021-2022ன் கீழ் ரூ.115.00 இலட்சம் மதிப்பீட்டில் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அமைக்கும் மற்றும் ரூ.121.00இலட்சம் மதிப்பீட்டில் ஏமப்பேர் குளம் மேம்பாடு செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022-2023ன் கீழ் விநாயக நகர் பூங்காவை மேம்படுத்தும் பணிக்கு திட்ட பிரேரணை அனுப்பிடவும். ஆகிய பணிகளை Drone Camera மூலம் புகைப்படம் எடுத்து அறிக்கை அனுப்பிவைக்க வேண்டி அறிவுறுத்தப்பட்டது. மேற்படி பணிகளை Drone Camera மூலம் புகைப்படம் எடுத்து அறிக்கை

அனுப்பிவைக்க வேண்டியுள்ளது.

எனவே, இப்பணிகள் மேற்கொள்ள ஏற்படும் தோரய மதிப்பீடு தொகை ரூ.1,00,000/-(ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2289/ 2022 / இ1)

**பொருள்.11**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்-5ல் உள்ள இராஜா நகர் பகுதியில் ராஜா திரையரங்கம் அருகில் உள்ள சாலையில் Airtel, Telesonic Networks Ltd.,சென்னை, என்ற நிறுவனம் கண்ணாடி ஒளி இழை கம்பி வழி தடம் பதிப்பதற்கு அனுமதி கோரியதற்கு அனுமதி கட்டணமாக ரூ.1,75,000/- செலுத்த தெரிவிக்கப்பட்டு. அதற்கான தொகையினை மேற்படி நிறுவனத்தால் செலுத்தப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி பகுதியில் கண்ணாடி ஒளி இழை கம்பி வழி தடம் பதிக்கும் பணிகள் மேற்கொண்ட போது அப்பகுதியில் பதிக்கப்பட்டிருந்த குடிநீர் விநியோக குழாய்கள் உடைப்பு ஏற்பட்டு பழுதடைந்தது. அதனை சரிசெய்யும் போது சாலைப்பகுதிகளை உடைத்து மேற்படி நிறுவனத்தின் மூலமே குடிநீர் விநியோக குழாய்களில் ஏற்பட்ட உடைப்புகளை சரிசெய்யப்பட்டது. மேற்படி பணிகளை மேற்கொள்ளும் போது சேதமடைந்த சாலையினை சீரமைக்க வேண்டி அதற்கான கட்டணமாக ரூ.2,00,000/-யை மேற்படி நிறுவனத்தை செலுத்த 01.08.2022-ல் அறிவிப்பு வழங்கப்பட்டதற்கு இனங்க மேற்படி நிறுவனம் சேதமடைந்த சாலையினை சீரமைக்க ரூ.2,00,000/- க்கான வங்கி வரவோலையை HDFC Bank Demand draft கா இந்நகராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்படி நிறுவனம் செலுத்திய சாலை சீரமைப்பு கட்டணத்தில் சேதமடைந்த சாலையினை சீரமைக்கும் பணியினை ரூ.2,00,000/-ல் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்க வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படிநிறுவனம் செலுத்திய சாலை சீரமைப்பு கட்டணத்தில் சேதமடைந்த சாலையினை சீரமைக்கும் பணியினை ரூ.2,00,000/-ல் மேற்க்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1005 / 2022 / இ1)

**பொருள்.12**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 7 இடங்களில் திறந்த வெளி கிணறுகள் அமைக்க தேர்வு செய்யப்பட்ட இடங்களில் Geologist மூலமாக ஆய்வு செய்து தண்ணீர் மட்டம் மற்றும் மண், பாறையின் தன்மையினை ஆகியவற்றை அறியவும் ஆய்வு செய்யப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே மேற்படி ஆய்வு அறிக்கை பெறுவதற்கு ஒரு இடத்திற்கு சோதனை செய்வதற்கு கட்டணமாக ரூ.12,000/-வீதம் 7இடங்களில் தலா மூன்று சோதனைகளுக்கான தோராய செலவினம் ரூ.2,52,000/-க்கு மேற்கொள்ள பட வேண்டியுள்ளது மிகவும் அவசியமாகிறது.

எனவே, இப்பணிகள் மேற்கொள்ள ஏற்படும் தொகை ரூ.2,52,000/-(ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பத்தி இரண்டாயிரம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள்

மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 885 / 2022 / இ1)

**பொருள்.13**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான நாளங்காடியில் அமைந்துள்ள 108 கடைகளில் கடை எண் 84ஐ குத்தகைக்கு எடுத்து நடத்திவரும் திரு ரஃபீக் அலி, கள்ளக்குறிச்சி என்பவர் தனது குடும்ப சூழ்நிலையின் காரணமாக தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தினால் கடையினை நகராட்சி வசம் ஒப்படைப்பதாக தெரிவித்து 04.08.2022ஆம் தேதியன்று விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளார்.

அன்னார் 2022-2023ஆம் ஆண்டுக்கு 06/2022ம் மாதம் வரை வாடகை தொகையினை செலுத்தியுள்ளார். அன்னாரின் விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து அன்னார் செலுத்தியுள்ள வைப்புத்தொகையினை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. திரு ரஃபீக் அலி, நாளங்காடி கடைஎண் 84இன் குத்தகைதாரர், கள்ளக்குறிச்சி என்பவரால் செலுத்தப்பட்ட வைப்புத் தொகையினை நிபந்தனைகளுடன் திரும்ப வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. கடையினை நகராட்சி வசம் கையகபடுத்தப்பட்டவுடன், பொது ஏலம் விடவும், அதற்கான செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 2132/2022/அ1)

பொருள்.14

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான பயன்பாட்டில் உள்ள குடிநீர் லாரி TN.32 P3612 என்ற வாகனம் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி வாகனத்தின் பின் பக்கம் உள்ள நான்கு டயர்கள் மிகவும் தேய்மானம் ஏற்பட்டு இயக்குவதற்கு மிகவும் சிரமமாக உள்ளதால் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோம் செய்யும் பணியானது பாதிப்படைகிறது. எனவே மேற்படி வாகனத்தின் நான்னு டயர்கள் மற்றும் டியூப்கள் மாற்றப்படட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே மேற்படி வாகனத்தின் டயர்கள் மற்றம் டியூப்கள் புதியதாக மாற்றிட ஏற்படும் தோராய மதிப்பீடு தொகை ரூ.60,000/- மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கும். பணியின் அவசரம் அவசியத்தை கருத்தில் கொண்டு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவுத் தொகையினை நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்க்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணியின் அவசரம் அவசியத்தை கருத்தில் கொண்டு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2220 / 2022 / இ1)

**தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது, நாள்.05.09.2022**

**அனுமதிக்கப்பட்டது.**

ஒம் (xxxxxxxxxxxx)

**திரு.இரா.சுப்ராயலு,**

//**உண்மை நகல்**// நகர்மன்ற தலைவர்

கள்ளக்குறிச்சி நகராட்சி

**ஆணையாளர்**

**கள்ளக்குறிச்சி நகராட்சி**